9th November 1966]

நிலையில் நஞ்சையாக்கினால், இரண்டு போகமாக்கினால் தீர்வை இரண்டு பங்கு, மூன்று பங்கு போடப்படுவது நியாயமா? இதை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினருக்கு விவசாயத்தைப்பற்றித் தெரியும் என்று நினைக்கிறேன். மழை காலங்களில் ஐந்நூறு நாட்கள்தான் அதிகமாகத் தண்ணீர் போகும். அதை வைத்துக்கொண்டு வருஷத்தில் 6 மாதம், 9 மாதம் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பது சரியாகாது. மற்ற விவசாயிகள் பாதிக்கப்படாதிருக்கத்தான் இந்த முறை.

மண்ணெண்ணெய்

* 562 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்திற்கு 1965 எப்ரல் முதல் இன்றுவரை மத்திய அரசாங்கம் கிரோசின் & டீசல் எண்ணெய் எவ்வளவு ஒதுக்கியுள்ளது?

கனம் திரு. வெ. ராமையா: கிரோஸின்—2,75,605.3 கிலோ லிட்டர். டீசல் எண்ணெய்—2,74,535.7 கிலோ லிட்டர்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: ஒரு லிட்டர் கிரோசின் வெள்ளெண்ணெய் 50 பைசாவுக்கு விற்கப்படுகிறது. இது சர்க்கார் விதித்துள்ள ரேட்டா?

கனம் திரு. வெ. ராமையா: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

The Cauvery Delta

* 563 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the details of the steps taken by the Government to give relief to the ryots affected by the scarcity of water in the Cauvery delta ; and

(b) the causes for the precariously low level of water reached of Mettur Dam during the year 1965?

The Hon. Sri V. RAMAIAH: (a) & (b) A statement [a] is placed on the Table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, மெர்க்காராவில் மழை அளவு எப்படிப் பதிவு செய்யப்படுகிறது என்பதை கவனித்துக்கொள்ள நம் அரசாங்கச் சார்பில் எந்த அதிகாரியாவது இருந்து பரிசீலனை செய்து வருகிறார்களா?

கனம் திரு. வெ. ராமையா: எ.இ. அல்லது இ.இ. கிரேடில் போடப்பட்டு இருக்கிறது.

---

[a] Printed as Appendix IX on pages 908–916